1973 பிப்ரவரி 13]

நாதசுர இசைக்கருவிகள் தயாரிப்பு

** 147 வினா—திரு. என். கிட்டப்பா :* மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நாதசுர இசைக்கருவி செய்யும் தொழிற்கூடம் தற்போது எங்கெங்கு உள்ளன ?

(இ) அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கட்கு அரசு ஏதேனும் உதவி வழங்கியுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) நாதசுர இசைக்கருவி செய்யும் தொழிற்கூடம் எதுவும் அரசுத் துறையிலும் தொழில் கூட்டுறவுத் துறையிலும் இயங்கவில்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த நாயன இசைக் கருவிகள் தமிழகத்தின் பண்பாட்டை விளக்குவதாக இருப்பதால் அரசு அதற்கு ஊக்கமளித்து தனியார் துறையிலோ அல்லது அரசுத் துறையிலோ ஓரிரண்டு இடங்களில் உற்பத்தி செய்ய இனியேனும் ஆவன செய்ய முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியார்த் துறையில் தஞ்சை மாவட்டத்தில் தோழுந்தூரில், நரசிங்கம்பேட்டையிலும் நாயனம் உற்பத்தி செய்கிறார்கள்.

திரு. என். கிட்டப்பா : தனியார் துறையில் உற்பத்தி செய்கின்ற அத்தகைய நிறுவனங்களுக்கு அரசு ஏதேனும் மானியத் தொகையோ, உதவித் தொகையோ, கடன் தொகையோ அளித்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி அவர்கள் முன்வந்து கேட்பார்களானால் பரிசீலிக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Nadaswaram is one of the best of fine-arts which has developed to a great extent in Tamil Nadu. The people who are following this are poor. Will the Hon. Minister give an assurance that sufficient grant will be given to these people to develop the art ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது உற்பத்தி செய்வது பற்றிய கேள்வி. கலைஞர்களுக்கு உதவித் தொகை அளிப்பதுபற்றி முதலமைச்சரவர்களைக் கேட்க வேண்டும்.

[1973 பிப்ரவரி 13

திரு. ஆ. பரந்தாமன் : நாதசுர இசைக் கருவிகளுக்கு வெளி நாடுகளில் அதிகமான கிராக்கி இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த வகையில் தமிழக அரசே பொறுப்பேற்று நாதசுரக் கருவிகள் உற்பத்தி செய்யும் தொழிற் கூடத்தை அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு பெரிய தொழிற்கூடம் அமைக்கும் அளவுக்கு இதற்கு விற்பனைக்கு வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. ஆங்காங்கு பழமையான தொழிலாக இதைக் கொண்டிருப்பவர்களுக்கு வேறு எந்தவித மான உதவியாவது தேவையாக இருக்குமானால் அதுகுறித்து அரசாங்கம் பரிசீலிக்கலாம்.

(திரு. நா. வீராசாமி தலைமை.)

தென்னார்க்காடு மாவட்டத்தில் கிடைக்கும் கறுப்புக் கற்கள்

* 148 **வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னார்க்காடு மாவட்டத்தில் குன்னம் அருகே கிடைக்கும் கறுப்புக் கற்களை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : இப்படிப்பட்ட கறுப்புக் கற்கள் நம் நாட்டில் கிடைப்பதை நல்ல முறையில் பாலிஷ் செய்தால் கட்டடங்கள் பளபளப்பாக இருக்கும் என்று கூறப்படுகிறது. அப்படிப் பாலிஷ் செய்யும் தொழிற்சாலைகள் ஜப்பானில் இருக்கின்றன. இங்கேயும் அம்மாதிரி அமைக்கும் செயற்குறிப்பு இருக்கிறதா ? அல்லது இனிமேலாவது அரசு அதுகுறித்து ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வெளியே நாம் கற்களை அனுப்பாமல் நம் மாநிலத்திலேயே அதை பாலிஷ் செய்யக்கூடிய அளவில் சிறு சிறு தொழிற் சாலைகளை நடத்தி வருகிறார்கள். இன்னும் அதைத் தொடங்க யாராவது முன் வந்தால் அதற்கு உதவி செய்யலாம்.

திரு. எம். இராதாகிருட்டிணன் : வடார்க்காடு மாவட்டத்தில் தண்டாரம் பட்டு பஞ்சாயத்து யூனியனில் இப்பேர்ப்பட்ட கறுப்புக் கற்கள் இருக்கின்றன. அவை தேவை என்று யாராவது விண்ணப்பித்திருக்கிறார்களா ? அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா ?